# வேது தமிழாராய்ச்சி மாநாடு: 'வித்தி தலைமையில்

# இலங்கைக் குழு நியமனம்


விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 தை 26 றவி ஆகிர் 13 இதழ் 357

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 8 2 82


[யாழ்ப்பாணம்]

ஆறுவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு, சிங்கபூரில் அடுத்தவருடம் ஜனவரி மாதம் பத்தாம் திகதி நடைபெறும். இம் மகாநாட்டில் சமர்ப்பிக்கப் படும் ஆராய்ச்சிக்கட்டுரை கள் தொடர்பாக அமைக் கப்பட்டிருக்கும் இலங்கைக் குழுவுக்கு யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் பேரா சிரியர் சு. வித்தியானந்தன் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

அடுத்த தமிழாராய்ச்சி மகாநாடு சிங்கப்பூரில் 1983 ஜனவரியில் நடைபெறுகிறது. இம் மகாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு சிங்கப்பூர் தமிழர் இயக்கப் ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

சிங்கப்பூர் தமிழாராய்ச்சி மகாநாடு சம்பந்தமாக ஆராய்ச்சிக்கட்டுரைகளைப் பரி சிலனைசெய்து தெரிவுசெய்யும் குழுவில் இலங்கைக்கு முக் கியத்துவம் அளிக்கப்பட்டுள் ளது. ஆராய்ச்சிக்கட்டுரைகள் பரிசீலனை தொடர்பாக யாழ்ப் டாணம் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தி யானந்தன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் ஏனைய அங்கத்தவர்களாக பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா.இந்திரபாலா, விரிவுரையாளர்கள் கே. சிவத் தம்பி, அ. சண்முகதாஸ் ஆகி யோர் இடம்பெற்றுள்ளனர்.

மேற்படி தகவல்களை வெளி யிட்ட அனைத்துலக தமிழா ராய்ச்சிமன்ற இலங்கைக் கிளை யின் செயலாளர் கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரை ராஜா, சிங்கப்பூர் மகாநாடு பயனுள்ளதாக, முழுக்க முழுக்க ஒரு ஆராய்ச்சி மகாநாடாக இதுவரை நடை பெற்ற மகாநாடுகளில் ஒரு திருப்பு முனையாக அமைய சிங்கப்பூர் உதவிப் பிரதமர் திரு. ராஜரத்தினம். அமைச் சர் திரு. தனபாலன், பாராளு மன்ற அங்கத்தவர் ஜனுப் ஜபார் ஆகியோருடன், மகா நாட்டைநடத்தும் சிங்கப்பூர் தமிழர் இயக்கத்தின் தலைவர் திரு. சுப்பையா, செயலாளர் திரு. மா. சி. வீரப்பன் ஆகி யோரும் சிறப்பாக பணி யாற்றி வருகின்றனர் என்று கூறினர்.

ஆராய்ச்சிக்கட்டுரைகள் சிங் கப்பூர் தமிழர் இயக்கத்துக்கு அனுப்பப்படும்போதிலும்; கட்டுரைகளைப் பரிசீலனை செய் யும் பொறுப்பு இலங்கைக் குழுவினருடன் இந்திய, மலே சிய அறிஞர்களிடம் விடப் படும் என்றும்; இலங்கையிலி ருந்து அவர்கள் அதிக ஆராய்ச் சிக்கட்டுரைகளை எதிர்பார்க் கின்றனர் என்றும் திரு. வி. எஸ். துரைராஜா கூறினர்.

★ கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

# விமானவிபத்து தவிர்க்கப்பட்டது!

## 226 பிரயாணிகள் உயிர்தப்பிய அதிசயம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வ தேச விமான நிலையத் தில் நேற்று அதிகாலை ஏற்படவிருந்த பெரும் விபத்து விமான ஓட்டி களின் சாதுரியத்தினுல், உரிய நேரத்தில் தவிர்க் கப்பட்டது. இந்த விமா னத்தில் பயணம் செய்த 226 பிரயாணிகளும்எவ் வித ஆபத்துமின்றி மயி ரிழையில் உயிர் தப்பி னர்கள்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று அதிகாலை 3 மணிக்குப் புறப்பட்ட 'கல்ப் எயர் லையன்ஸ்' ஜெட் விமானத்தின் சில்லு ஒன்று ஓடுபாதையை விட்டு விமானம் மேல் எழும் பும் நேரத்தில் கழன்று விழுந் ததினுல் விமானம் பாதுகாப் பாக நிறுத்தப்பட்டு அச்சேவை ரத்துச் செய்யப்பட்டது.

அந்த ஜெட் விமானம் தொடர்ந்து விமானநிலையத் தில் நிறுத்தி வைக்கப்பட்டுள் ளது. விமானத்தைத் திருத்த மூன்றுநாட்கள் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவததைத் தொடர் ந்து, கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட மற்றும் விமானங்கள் தாம தித்தே செல்ல நேரிட்டது.

சில விமானங்கள் தரையில் இறக்கப்படாமல் வேறு விமான நிலையங்களுக்கு திசை திருப்பிச் செல்லவேண்டிய நிலைஏற்பட்டது.

'ஜெட்' விமானம் புறப்,

(8ம் பக்கப் பார்க்க)

யாழ். மாவட்டம்:

## விசேடசேவை அலுவலர்: 10ல் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 11 தொகுதிகளுக்குமான விசேட சேவை அலுவலர் நிய மனங்கள் இம்மாதம் 10 ம் திகதி முதல் வழங்கப்படவிருக் கிறது.

இந்நியமனங்களுக்கான கடி தங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

யாழ் மாவட்ட தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு எம். சுப்பிரமணி யம் இதற்கான பயிற்சி வகுப்பை நடத்துவதற்கு நட வடிக்கை மேற்கொண்டுள் ளார்.

த. வி. கூட்டணியின்சிபார்சி லேயே இந்நியமனங்கள் வழங் கப்பட்டுள்ளன.

கிராமசேவை அலுவலர் களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று 8ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை யாழ். செயல கத்தில் நடைபெறவிருக்கிறது.

மேலதிக அரசாங்க அதிபர் கள் திருவாளவர்கள் எம். பஞ்சலிங்கம், எஸ். எஸ். தர்மபாலன், ஏ.எம். குலநாய கம் ஆகியோர் இப்பரீட் சையை நடத்தவிருக்கின்ற னர். [மா]

# "நூலகம் மீண்டும் எரிக்கப்பட்டால் கைகட்டி நிற்கமாட்டோம்!"

## நூலக அடிக்கல்நாட்டு வைபவத்தில் 'சிவா' ஆக்ரோஷமான பேச்சு

(ஏ. வி. மாணிக்கம்)

"காட்டுமிராண்டிகளால் எரிக்கப்பட்ட யாழ். பொது சன நூல் நிலையம், தமிழினத் தின் சரித்திரத்தில் என்றும் மறக்க முடியாத ஒரு நினைவுச் சின்னமாகும். நாங்கள் கட் டப்போகும் நூல் நிலையம் மீண்டும் எரிக்கப்பட்டால் கைகட்டிக்கொண்டிருக்கமாட் டோம்; அப்படி இருந்தால் மனிதர்கள் என்று கூறுவதற் கும் லாயக்கற்றவர்கள்."

தமிழர் விடுதலைக் கூட்ட ணித் தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம்.சிவ சிதம்பரம், யாழ். பொதுசன நூல் நிலையத்தின் மூன்றும் கட்டத்துக்கான அத்திபாரக் கல் நாட்டும் வைபவத்தில் கலந்துகொண்டுஉரைநிகழ்த்து கையில் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

நேற்றுமாலை எரிந்த யாழ். பொதுசன நூல் நிலையத்துக் குப் பின் பகுதியில் இந்து சமயாசார முறைப்படி யாழ். மாநகர முதல்வர் திரு.இராசா விசுவநாதனும் திருமதி விசுவ நாதனும் புதிய நூல்நிலையத் துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்கள்.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லா மிய மதகுருமார்கள் ஆசியுரை வழங்கினர்கள்.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனின் தலைமையுரையை தொடர்ந்து திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கட்டப்போகும் நூலகக் கட்டிடம் நாள் நட்சத்திரத் தில் தங்கியிருக்கவில்லை. எங் கள் கைகளில்தான் தங்கியி ருக்கிறது. எமது நூலகம் என்ற நிலையில் இதை நாம் கட்டிஎழுப்பவேண்டும்.

"அவ்ரோ விமானத்தை எரித்ததற்காகத்தான் நாங்கள் நூலகத்தை எரித்தோம்என்று சொன்னுர்கள். ஆனுல் மீண் டும் ஒருதரம் நாம் கட்டப் போகும் நூலகம் எரிக்கப்பட் டால் நாம் மனித வர்க்கத்தை சார்ந்தவர்களல்ல என்பதை கூறிவைக்க விரும்புகிறேன் என்ருர்.

'நடா' பேச்சு

"தமிழனுக்கு தமிழரசு

(8ம் பக்கம் பார்க்க)

# "அரசியலைவிட்டு விலகவோ கட்சிமாறவோ மாட்டேன்"

## தொழிற்சங்கக் கருத்தரங்கில் 'சங்கரி'

(யாழ்ப்பாணம்)

"எனக்கு அரசியலை விட்டு ஒதுங்கும் எண் ணமோ, கட்சிமாறும் நோக்கமோ கிடையாது. சமீபகாலமாக என்னைப் பற்றி பலவிதமான விமர்சனங்கள் தற் போதைய அரசியல்சூழ் நிலைகுறித்து வெளிவரு கின்றன. இவை என் அரசியல்விரோதிகளால் திட்டமிடப்பட்டு மேற் கொள்ளப்படுகின்ற விஷமத்தனமான பிர சாரமாகும்."

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் தொழிற்சங்க கூட்டணி கருத்தரங்கில் உரையாற்றிய கிளிநொச்சி எம். பி. திரு.வி. ஆனந்தசங்கரி மேற்கண்ட வாறு கூறினர்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள அலுவலகத்தில் திரு. ஐ. ரி. சம்பந்தன் தலை மையில் நடைபெற்ற கருத் தரங்கில் கிளிநொச்சி எம். பி. தொடர்ந்து உரையாற்றுகை யில் கூறியதாவது: நான என் அரசியல் வாழ்க்கையினை இடதுசாரி இயக்கத்தில்தான அதிக நாட்களை கழித்துவந்த வன். அக்கட்சி நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டுள்ளேன். தமிழ் மக் களுக்கு அதன்மூலம்நம்பிக்கை கிடைக்குமென்நம்பி ஏமாந்த பின்புதான்அதனைவிட்டுவெளி யேறினேன்.

1972—1977க்கும் இடைப்

8-ம பக்கம் பார்க்க)

## மணிநேரம் காத்திருந்த அமைச்சர் மத்யூ

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் துறை முகத்தின் புதிய துறைமுக மேடையைத் திறந்து வைத்த அமைச்சர் மத்யூ துறைமுக மேடையில் சுமார் ஒருமணி நேரம்வரை காத்திருந்தும் இறக்குமதியை ஆரம்பித்து வைக்க முடியவில்லை.

பொருட்களை ஏற்றிஇறக்கும் 'லிப்ட்' இயங்க மறுத்ததன் காரணமாகவே அமைச்சர்காத் திருக்கவேண்டி ஏற்பட்டது. அமைச்சர் அங்கிருந்து சென்ற பின்னர் சிமெந்து தொழிற் சாலைக்கென வந்த பாரிய இயந்திரம் உட்பட பல பொரு ட்கள் இறக்குமதி செய்யப் பட்டன. (இ)

### மணிவாக்கு

இல்லது என் இல்லவள் மாண்பானல்?
உள்ளது என்
இல்லவள் மாணுக்கடை?

— குறள்

# நமது நோக்கு

## ஆசியா அத்துணை மோசமா?

அத்தனகலத் தொகுதியில் உள்ள ஒரு மகாவித்தியாலயத்தில் 12ம் வகுப்பில் படித்த மாணவி ஒருவரின் மரணவிசாரணையின் விபரம் இவ்வாறு செய்தியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறந்த மாணவியின் தாயார் சாட்சியமளித்த போது தனது 18வயதுடைய மகள் ராணுவத்தினர் ஒருவருடன் காதல் கொண்டிருந்ததாகத் தனக்கு சில நாட்களுக்கு முன் தகவல் கிடைத்ததாம்.

குறிப்பிட்ட நாளன்று—மரணம் எய்திய நாள்—பாடசாலையிலிருந்து அதிக நேரம் பிந்தி வீடுதிரும்பிய போது, மகளைத்தான் ஏசிய தோடு துடைப்பத்தால் அடித்ததாகவும்சொன்னர்; சிறிது நேரத்தில் வீட்டுக்குப் பின்புறத்தில் தன்மகள் நஞ்சருந்துவதாக யாரோ கூச்சலிட தான் ஓடிப்போனதாகவும், போத்தலைப்பறிக்க முன்னரே நஞ்சை அருந்திவிட்டதாகவும் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என்ற தீர்ப்பை வழங்கியதோடு, பெற்றோர் சற்றே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன்பிள்ளைகளின் குறைகளை அணுக வேண்டுமென்ற புத்திமதியையும் கூறியதாகச் செய்தித் தலையங்கம் தீட்டப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு அமைந்திருந்தால், இந்தத்துன்பியல் நாடகம் தவிர்க்கப்பட்டிருக்குமென்பது அவருடைய கருத்து. எதனை விட்டுக் கொடுப்பதென்பது மர்மமாகவே இருக்கிறது.

அவர் மரணவிசாரணை அதிகாரிஒழிய மான விசாரணை அதிகாரியல்லவென்பதை கருத்திற்கொண்டால் அவர் சொன்னது மிகச்சரியென்றே கொள்ளவேண்டும்.

நஞ்சும், நச்சுப்பொருட்களும் வீட்டிலும் வெளியிலும் தாராளமாகக் கிடைக்கும்சூழ்நிலையில் தற்காலிக பித்துப் பிடிக்குமெவருக்கும் அபாயமென்பது இன்னொரு தலையங்கத்துக்குப் பொருத்தமான விடயம்.

அதுநிற்க: இதற்கு நேர் மாறான இன்னொரு சம்பவத்தை ஊன்றிப்பார்ப்போம்: இது 'லண்டன் டைம்ஸ்' ஜனவரி 7ம் தேதி பிரசுரத்தில் காணப்பட்டது. இதனை இலங்கை வாசகர்கள் அறிய வேண்டுமென்ற ஆதரத்துடன் ஒரு இலங்கை வாசி 'ரிறிபியூன்' (Tribune) சஞ்சிகைக்கு அனுப்பியிருந்தார்! செய்தி பின்வருமாறு:

17வயததைந்த ஒருயுவதி 33 வயதுடைய வர்த்தகரொருவரால் பலாத்காரப் படுத்தியதற்கு, கோர்ட் நீதிபதி 2000 பவுண் அபராதத்தையே தண்டனையாகத் தன்தீர்ப்பில் வழங்கினர்.

பெண்ணின் தகப்பனர் இத்தீர்ப்பைக் காரசாரமாகக்கண்டித்ததுடன் இத்தீர்ப்பால் இரவு தனிவழி செல்லும்பெண்கள் இவ்வித சம்பவங்களுக்குப்பலியாவதற்கு வழிதிறக்கப்பட்டிருக்கிறதென்றார். சட்டத்தைத் தன்கையிற்கொண்டு குற்றவாளிக்குத் தகுந்த பாடம் படிப்பித்திருக்கலாம்; ஆயினும் பிரிட்டிஷ் நீதியை நம்பி மோசம்போய் விட்டதாகக் கவலை தெரிவித்திருக்கிறார்.

சம்பவம் நடைபெற்ற பின்னணி நீதிபதியின் தீர்ப்புக்கு ஒருசிறு விளக்கமளிக்கின்றது 'பெண்' தான் மணமுடிக்கவிருக்கும் காதலனை —ஒரு அமெரிக்க ராணுவ வீரன்— சந்தித்தபின் தனியே இரவில் வீடு திரும்ப நேரிட்டது. பாதுகாப்புக்காக வழியிற்செல்லும் வாகனகாரரின் உதவியை நாடியதே இச்சம்பவத்தின் துணைக்காரணமாகும்.

''இரவில் தனிவழி செல்லும் பெண்கள், வாகனகாரரின் தயவை நாடுவதால் இத்தகைய பலாத்காரத்துக்கு மறைமுகமாக உதவுகின்றனர்'' என்பது நீதிபதியின் கருத்தாகும்.

இருப்பினும் லண்டன் சட்ட மேதைகள், தொகுதி எம். பி., வழக்கறிஞர்கள் மன்றத்தலைவர் எல்லோரும் இத்தீர்ப்பைக் கண்டித்திருக்கின்றனர்; அவர்காட்டிய காரணத்தையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. சிறைத்தண்டனைக்குரிய குற்றம், இவ்வாறு இலகுவாகத் தப்புவதற்கு வழி கிடைத்தால், அதிகரிக்குமென்பதே அவர்கள் அபிப்பிராயமும் ஆழ்ந்தகவலையுமாகும்.

இந்தநாடகத்தின் மற்றையகாட்சியே எமது தலையங்கத்துக்குப் பொருத்தமானது.

இந்தவழக்கின் தீர்ப்பு கடுமையாகக் கண்டிக்கப்பட்டபோது, ஸ்காட்லன்ட் மாவட்ட நீதிபதி ஒருவர் 13 வயதுடைய ஒரு ஆசியயுவதிமேல் மிகக்கீழ்த்தரமானமுறையில் பலாத்காரம் நடத்திய ஒருவருக்கு 750 பவுண் அபராதம் விதித்த கதை பிரஸ்தாபிக்கப்பட்டது. இத்தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டது; ''இந்தக்குற்றத்தை நான் பாரதூரமாகக்கொள்ளாததற்கு ஒரு காரணம்; ''ஆசிய யுவதிகள் விவாகமாக முன்னரே பாலியல் சேர்க்கையில் ஈடுபடுவது ஒரு சமுதாய வழக்கம்''

ஆசிய மக்களுக்கு ஒரு தீராத வசையை உண்டு பண்ணும் கருத்து இது வென்று அங்கு பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நீதிபதி பதவியை இழந்தது பற்றி முரண்பாடான செய்திகள் கூறப்படுகின்றன. ஆசியப் பண்பாட்டுக்கு அதோகதி!

ஆங்கில, ஐரோப்பிய மக்கள் ஆசியநாடுகளை ஆண்ட காரணத்தால் ஆசியப் பண்பாடுபற்றி இத்தகைய மூடநம்பிக்கைகளைக்கொண்டிருப்பது வியப்பல்ல.

அத்தனகலையானலென்ன ஆசியா, ஐரோப்பாவானலென்ன காலப்போக்குடன் வாழ்க்கை முறைகள் மாறுபடும். ஆனல் வழக்கங்கள் எவ்வளவு மாறியபோதும் எக்காலத்திலும் மாருத உண்மையை மகளிரைப் பற்றிய உண்மையை அத்தனகலைச் சம்பவத்தில் இடம் பெற்ற துடைப்பம் உலகுக்கு எடுத்துரைக்கிறது

''பெண்ணின் பெருந்தக்கயாவுள, கற்பென்னும் திண்மை உண்டாகப்' பெறின்.

---

# 'யாழ். பல்கலைக்கழகத் தேவையைப் பூர்த்தி செய்ய யாழ்.மாவட்ட எம்.பிக்களும் மானியக்குழுவும் உதவுங்கள்'

## மருத்துவபீடத் திறப்புவிழாவில் உபவேந்தர்

(யாழ்ப்பாணம்)

''யாழ் பல்கலைக்கழகத் தேவையைப் பூர்த்தி செய்ய யாழ். மாவட்ட எம்பிக்களும் பல்கலைக்கழக மானியக்குழுவும் உதவவேண்டும்''

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நேற்று முன்தினம் யாழ், பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் முதலாம் கட்டடத் திறப்பு விழாவுக்குத்தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்துள்ளளார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்பு, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எவ். எஸ். சி. பி. கலபகே பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் ஏ. கூவர், பேராசிரியர் ஆர், கனகசுந்தரம் ஆகியோரை, மருத்துவபீட ஒப்பந்ததாரர் மனேகரன் வெற்றிவேலு ஸ்தாபனத்தினர் மாலைசூட்டி வரவேற்றனர்,

அவ்விழாவில் பேராசிரியர் வித்தியானந்தன் தொடர்ந்து பேசுகையில்:

''பேராசிரியர் கூவர், கல்விப்பணிப்பாளர் திரு. சிவநாதன் ஆகியோரின் முயறசியினல் மருத்துவ பீடம் துரித வளர்ச்சிகண்டு, 1979 நவம்பர் 29ல் அடிக்கல் நாட்டப்பட்டது: பல்வேறு நெருக்கடிகள் காரணமாக உரிய காலங்களில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படவில்லை, யாழ்ப்பாணம் அரசாங்க ஆஸ்பத்திரியில், மருத்துவ பீடத்துக்கான பிணி ஆய்வுக்கான போதன நெறி திருப்திகரமற்ற நிலைவரங்களின் கீழ் நடாத்தப்பட்டது, மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இத்துறைகளை இயங்கவைத்த உத்தியோகத்தர்கள் பணியாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்'' என்றார்,

## 'வைத்தியக்கல்வி பெற முற்றிலும் வசதிபோதாது'

### --மாணவர் பிரதிநிதி

மருத்துவபீட மாணவர் பிரதிநிதி திரு. கே. சுகுமார் பேசுகையில் கூறியதாவது; ''79ம் ஆண்டு கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு 81ம் ஆண்டில் இக்கட்டிடம் பூரணமான முறையில் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும் 82ம் ஆண்டில் ஒருபகுதியைத்தானும் பூரணமான முறையில் உபயோகிக்க முடியாத நிலையில் இருக்கிறது. ஒப்படைக்கப்பட்ட இப்பகுயில் நல்ல வசதிகள் இல்லை.

மருத்துவபீடத்தின் மூன்று துறைகள் மட்டுமே இயங்குவதற்குப் போதுமான இடவசதியைக் கொண்ட கையளிககபட்ட புதிய கட்டிடத்தில் எட்டுப்பீடங்களைச்சேர்ந்த முன்னூறு மாணவர்கள் பயிலவேண்டியதுடன் நூலகமும் இதில்தான் அமையவேண்டும், அதுவும் வைத்திய போதனை நடைபெறும் நேரம் 2ம், 3ம் கட்ட வேலைகள் நடைபெறும். அப்பொழுது அதிலிருந்து வெளிப்படும் தூசிகளும். சத்தங்களும் மாணவர்களைக்கல்வி பயிலமுடியாமல் தடைசெய்து கொண்டிருக்கும்.

அடிக்கல் நாட்டப்பட்ட காலம் தொடக்கம் தாமதமாகவே வேலைகள் நடைபெற்று ஒருபகுதியும் அரைகுறையாக முடிக்கப்பட்டிருக்கிறது. மிகுதிக்கட்டப் பகுதிவேலைகளும் நத்தை வேகத்தில் செல்லுமானல் வைத்திய மாணவர் பரம்பரையே பாதிப்புக்குள்ளாகும்.

### காலி மருத்துவபீடம்

''இதேகால எல்லையில் ஆரம்பிக்கப்பட்ட காலி மருத்துவ பீடம் முநிமுலையில் கட்டப்பட்டு கையளிக்கப்பட விருப்பதையிட்டுப் பெருமைப்படும் அதேநேரத்தில் யாழ். மருத்துவபீடமும் கூடிய விரைவில் முழுமையாக கிடைக்க ஆவன செய்யவேண்டும்.''

### 2 கோடியும் 25 லட்சமும்

பிரதான மண்டபம் கட்டி முடிக்க 2கோடி ரூபா தேவைப்படும். ஆனல் இந்த வருடம் 25லட்சம்ரூபாவே ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் திரு. சுகுமார் கவலை தெரிவித்தார்.

(மா)

---

## ''பாரதி நூற்றுண்டில் பாராட்டுக்குரிய போராட்டம்''

(யாழ்ப்பாணம்)

''சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்படுத்திய பாரதி நூற்றுண்டில் அறவழிப் போராட்டக்குழுவினரின் சீர்திருத்தப் போராட்டம் பாராட்டி வரவேற்கக்கூடியதாகும்.''

இவ்வாறு சாவகச்சேரி அறவழிப் போராட்டக் காரியாலயத்தில் நடைபெற்ற தம்பிராசா—வசந்தி ஆகியோரின் சீர்திருத்தத் திருமண வைபவத்தில் கலந்துகொண்ட சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சி. க. மயில்வாகனம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாவட்ட அபிவிருத்திசபை வேட்பாளராக (த. வி. கூ.) போட்டியிட்ட திரு. சி. நவரத்தினம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

''இந்த தம்பதிகள் போலி சமுதாயத்தின் கட்டுக் கோப்பைமீறி புதிய சகாப்தம் உருவாக்கும் பணிக்காகச் சீர்திருத்த திருமணம் செய்ய முன்வந்துளளது பாராட்டக்கூடியது'' என்று திரு. நவரத்தினம் தமது தலைமையுரையில் கூறினர்.

(உ)

---



இன்று இணுவில்
சிவகாமி அம்மன் சங்காபிஷேகமும் நாளை ஏகலட்சார்ச்சனையும்

## சிவகாமி பதம் தொழுவோம்

உலகம் யாவும் ஈன்றாளை
உயிர்கள் யாவும் காப்பாளை
நலன்கள் யாவும் தருவாளை
நல்லோர் நெஞ்சில் உறைவாளை
கலைகள் யாவும் ஆனளை
சவினர் வடிவம் கொண்டாளை
நிலைகொள் இணுவைப் பதிமேவும்
அன்னை பாதம் தொழுவோமே.

அன்னை தேவி சிவகாமி
அவளின் புகழைப் பாடிடுவோர்
இன்னல் நீங்கி மகிழ்வார்கள்
இருளை நீக்கி ஒளிகாண்பார்
துன்னும் வினையை வெல்வார்கள்
தூய அருளில் தோய்வார்கள்
அன்னை அன்னை எனப்போற்றும்
அந்த மகிழ்வில் திளைப்பார்கள்.

-- ''பாலமுரளி''

### தமிழீழப் பிரகடனம் ஒத்திவைப்பு:

# லண்டன் சஞ்சிகை வரவேற்றுத் தலையங்கம்

(யாழ்ப்பாணம்)

லண்டனிலுள்ள தமிழர் இணைப்புக்குழுவின் தமிழீழப் பிரகடனத்தை காலவரையின்றி ஒத்திப்போட்டிருப்பதை (லண்டனிலிருந்து வெளிவரும் 'ரமிழ் டைம்ஸ்' என்ற ஆங்கில சஞ்சிகை வரவேற்று தலையங்கம் தீட்டியிருக்கின்றது.

இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் தங்களின் விட்டுக்கொடுக்கமுடியாத சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள், அவர்கள் விரும்பினுல் தமக்கென ஒரு தனிநாட்டை அமைத்துக் கொள்ளமுடியும் என நாம் நம்புகின்ருேம். எங்கே, எப்பொழுது. எந்தச் சூழ்நிலையில் இதனைச்செய்ய வேண்டும்என்பதைபாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலுமுள்ள தமிழ்மக்களின் அதிகாரம்பெற்ற தலைவர்கள் மூலமே செய்யவேண்டும். இந்த வகையிலான எந்தவொரு முயற்சியும் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின்பெரும்பான்மையானவர்களின் ஆதரவைப்பெற்றிருக்கவேண்டும்.

இதில் சர்ச்சைக்கு இடமில்லை. என்னதான் நல்ல நோக்கம் கொண்டதாய் இருந்தபோதிலும் எந்தஒரு தீர்மானத்தை அல்லது திட்டத்தை தமிழ்மக்களின் விருப்பத்துக்குமாருக அவர்கள் மீது திணித்துவிடமுடியாது'' என்று அத்தலையங்கம் மேலும் குறிப்பிடுகின்றது.

## பிரகடனம் ஒத்திவைப்பு

'ரமில் டைம்ஸ்' தனது முன்பக்கத்தில் பின்வரும் செய்தியையும் வெளியிட்டிருக்கின்றது.

''ஒருசில இலங்கைத் தமிழர் குழுக்களைக்கொண்டு லண்டனில் இயங்கும் தமிழர் இணைப்புக் குழுவின் அழைப்பாளர் திரு. கே. வைகுந்தவாசனுல் 1982ஜனவரி 14ம் திகதி தன்முனைப்பாக மேற்கொள்ளப்படவிருந்த தமிழீழப் பிரகடனம் காலவரையறையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளது.

திரு. வைகுந்தவாசன் 1981 நவம்பர் 14ம் திகதி விடுத்த அறிவித்தல் ஒன்றில், 1982 பொங்கல் தினத்தன்று தமிழீழச் சுதந்திரப் பிரகடனத்தைச் செய்வதென்று நாம் முடிவுசெய்கிருேம் எனத் தெரிவித்திருந்தார். இந்த அறிவித்தல் இலங்கைப் பத்திரிகைகளில் விரிவான விளம்பரத்தைப் பெற்றது. அரசாங்கம் இதனைப்பயன்படுத்தி வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்தியது.

இதனுல் இணைப்புக்குழுவின் சகாக்களால் திரு. வைகுந்தவாசன் கடுமையாகக்கண்டிக்கப்பட்டதாகவும் திட்டத்தைக் கைவிடும்படி நெருக்கப்பட்டதாகவும் நம்பகமாக அறியப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அதனை ஏற்றுக்கொள்ளாமையாலும் இலங்கையிலுள்ள தமிழ்மக்கள் ஆதரிக்காமையாலும் லண்டனிலும் ஏனைய உலக நாடுகளிலுமுள்ள இலங்கையர் மத்தியில் ஆதரவு இன்மையாலும் திரு. வைகுந்தவாசன் தமது திட்டத்தைக் கைவிடவேண்டுமென அவர்களால் வற்புறுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

# நடமாடும் இலவச

## கண்சிகிச்சை முகாம்

(புலோலி)

இலங்கை விழிப்புலனற்ருேர் சங்கம் பருத்தித்துறைலயன்ஸ் கழகம் மந்திகை அரசினர் வைத்தியசாலை ஆகியன இணைந்து வடமராட்சிப்பகுதி மக்களின் நன்மை கருதி ஒழுங்கு செய்த நடமாடும் இலவச கண்வைத்திய சிகிச்சை முகாம் இம்மாதம் 25ம் திகதிதொடக்கம் நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கண்வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் தலைமையில் பதினைந்து வைத்திய நிபுணர்கள் இந்த இலவச கண்வைத்திய சிகிச்சை முகாமின்போது வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்வார்கள்.

தொண்டமானுறு வல்வெட்டித்துறை, பருத்தித்துறை. குடத்தனை அம்பன், மணற்காடு நாகர்கோவில், செம்பியன்பற்று குடாரப்பு மருதங்கேணி, உடுத்துறை ஆழியவளை நெல்லியடி, கரணவாய் இன்பருட்டி. திக்கம் ஆகிய இடங்களுக்கு இக் கண்வைத்திய நிபுணர் குழு சென்று அங்குள்ள கண்நோயாளிகளை பரிசோதனை செய்யும் பரிசோதனையின் பின் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய கண்நோயாளிகள் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப் படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கண்வைத்திய சிகிச்சை முகாமில் சிகிச்சைகளை பெற விரும்புபவர்கள் பருத்தித்துறை லயன் கழக அங்கத்தவர்களுடனும் மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாளுடனும் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# "புதியசமுதாயத்தைக் காண முயன்றவன் பாரதி"

(மாவிட்டபுரம்)

''இன்றைய இழிநிலை மாறி, புதியநிலை தோன்றினுல்தான் சமுதாயம் எழுச்சிபெறமுடியும். இன்றும்கூட உணர்ச்சியற்ற தன்மையும் ஒவ்வொருவரையும் அளந்துகொள்கின்ற சிந்தனை நிலையும் சமுதாயத்தில் ஏற்படவில்லை என்றே தோன்றுகிறது. சீர்திருத்தக் கொள்கைகள் பலபடைத்து உன்னத ஒரு புதிய சமுதாயத்தைக் காணமுனைந்த பாரதியார் எந்தநிலையில் எவர்நின்று நோக்கினுலும் ஒருசிறந்த பண்பாட்டாளாளனே தனது 39 வருடகாலத்துக்குள் எஞ்ஞானமும்கடந்து நின்ற மாமேதை அவர்''

வர்த்சலைவிளான் அ. மி. த. கவவன் பாடசாலை மண்டபத்தில் திருமதி செகரட்ணசிங்கம் தலைமையில் நடைபெற்ற பாரதி விழாவில் சிறப்புரையாற்றிய விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி இவ்வாறு கூறினுர். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது'

''தனக்கென மட்டும் இல்லாது ஒரு தேசிய சமுதாயத்தை நோக்கிய சர்வதேசியவாதியாகிய பாரதி, உலகத்தையுணர்ந்து செயல் வீரம் படைக்கும் திறமை படைத்திருந்தார். வேதனையும், சாதனையும் நிறைந்த தனது வாழ்க்கையில் என்றுமே ஞானேபவ நிலையில் விளங்கியவர். மனிதன் தனது எண்ணங்களையும், வாழ்வையும் சிறப்பிக்க வீணையை உவமையாகக் காட்டும் பாரதி, வீணையினுடைய இன்ப கானத்துக்கும் புழுதிக்கும் இடையேயுள்ள இடைவெளியும் இந்த மாநிலம் பயனுறச் சக்தியிடம் வல்லமை தாராயோ என்று கேட்கின்ற தன்மையும், தெய்வ சிந்தனை ஈடேற்றத்துடன் பொருந்தி நிற்கின்ற தன்மையும் வியத்தற்குரியது'' என்ருர்.

வர்த்தளை விளான் வாலிபர் சங்கத் தலைவர் திரு. க. கலைச்செல்வம உரையாற்றுகையில் கூறியதாவது: தனது பாடல்களில் தமிழைக்கையாளுகின்ற திறமை கொண்ட பாரதியார் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரதும் உளளத்தில் நிலைத்துக்கொணடிருப்பதில் வியப்பில்லை. சமுதாயத்தில் நிலவுகின்ற கொடுமைகளைக் கண்டு சகியாது தக்க பதிலடி கொடுகின்ற தன்மையுடனும், சமுதாயக் கருசதோட்டத்துடனும் உழைத்தவர் பாரதியே என்ருர்.

இவ்விழாவில் பலர் உரையாற்றினர்.

# "தூய உள்ளத்தையே இறைவன் எதிர்பார்க்கிருன்"

(கரவெட்டி)

''ஆலயத் திருவிழாக்களை ஆடம்பரமாகக் கொண்டாடுவதனுல் மாத்திரம் இறைவனுக்கு ஏற்றவர்களாக வாழ்ந்துவிடலாமென்று யாரும் எண்ணிவிடக்கூடாது. நம் ஒவ்வொருவரிலும் இறைவன் எதிர்பார்ப்பது தூய உள்ளத்தையே'' என்று அருட்திரு. எல். ஜெரொம் அடிகளார், பருத்தித்துறை தும்பளை புனித லூர்த்து மாதா தேவாலய வருடாந்த நவநாட்திருவிழாத் திருப்பலிப் பூசையை நிறைவேற்றி ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''குடும்பங்களின் முன்னேற்றத்திலேயே ஒரு சமுதாயம் உயர்வும், சிறப்பும் பெறமுடியும். குடும்பங்கள் சீர்குலையுமானுல் சமுதாயமே கெட்டுப்போய்விடுகின்றது. எனவே குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும், முன்மாதிரியாகவும் விளங்கவேண்டும்'' என்ருர்.

# சந்நிதியில்

## ஜீ. ஜீ. நினைவாக அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 5வது சிரார்த்த தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசையும் அன்னதானமும் நடைபெறும். (இ)

---

### மதுபோதையில்

# கலாட்டா

## ரூ. 500 அபராதம்

(புலோலி)

மதுபோதையில் வீதியில் நின்று கலாட்டா செய்தவரை 500 ரூபா பிணையில் செல்லுமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார்.

அல்வாயைச்சேர்ந்த பொன்னுத்துரை என்பவர் புலோலி உபயகதிர்காம வீதியில் மதுபோதையில் நின்று கலாட்டா செய்தபோது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு, எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியிடம் சிக்கிக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பொலிசார் இவரைப்பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்து இந்நபர் அடிக்கடி கலாட்டாச் சம்பவங்களில் ஈடுபடுபவரெனவும் இதனுல் அமைதிக்கு பங்கம் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்,

நீதவான் அவரை 500ரூபா ரொக்கப்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

# கொள்ளையர் அட்டகாசம் தினம்தினம் அதிகரிப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பொலிகண்டியில் தினமும் கொள்ளையர் அட்டகாசம் அதிகரித்துவருகின்றது. இதனுல் இப்பகுதி மக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர்.

கடந்த சில மாதகாலமாகப் பொலிகண்டிப் பகுதியில் இரவு வேளைகளில் விடுகளில் புகும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இங்குள்ள கடையொன்றில் புகுந்த முகமூடித் திருடர்கள் துப்பாக்கிமுனையில் கொள்ளை அடிக்க முயன்றபோது, அவ்வேளையில் இரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த வல்வைப் பொலிஸார் தக்க சமயத்தில் இக்கொள்ளை முயற்சியை முறியடித்துத் துப்பாக்கியுடன் முகமூடிக் கொள்ளைக்கோஷ்டியினரையும் கைதுசெய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

வீடுகளின் கூரை பிரித்தும், யன்னல் உடைத்தும் திருட்டுக்கள் நடைபெற்றுவருகின்றன. அண்மையில் பொலிகண்டிக் கந்தசாமி கோவிலுக்குள் புகுந்த திருடர்கள் துப்பாக்கிமுனையில் கோவில் ஐயரை மிரட்டிக் கொள்ளையிட முயன்றனராம்.

தினமும் நடைபெற்றுவரும் இத்திருட்டுக்களால் பொதுமக்கள் இரவு வேளைகளில் அச்சத்துடன் விழித்திருக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

# சதாவதானி கலாசார மண்டபம்

(புலோலி)

மேலைப்புலோலிசதாவதானி கதிரவேற்பிள்ளை கலாச்சார மண்டபமும் நூல் நிலையமும் அமைக்க நிதி ஒதுக்கீடுசெய்து தருவதாக பிரதேச அபிவிருத்தி இந்து கலாச்சார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. சி. இராசதுரை உறுதியளித்ததைத் தொடர்ந்து சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் அமைச்சருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

காலச்சார மண்டபமும் நூல் நிலையத்திற்குமான கட்டட வரைபடத்தையும் மதிப்பீட்டையும் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள நிலையத்தினர் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள சதாவதானி கதிரவேற்பிள்ளையின் வைரவிழாவின் போது புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டிடத்திற்கான அடிக்கல்லையும் அமைச்சர் திரு. எஸ், இராசதுரையை நாட்டிவைக்குமாறும் கோரியுள்ளனர்.

# 100 ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

நாவற்காடு வரணியைச் சேர்ந்த பொ. ஐயாத்துரை என்பவர் சாரதிப்பத்திரமின்றி மினிபஸ் ஓட்டினர் எனச் சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். யேசுதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்து இனிமேல் இக் கோட்டிற்கு வந்தால் 400 ரூபா அபராதமாகச் செலுத்த வேண்டிவரும் என்று எச்சரித்தார் (லெ)

குறைந்த சலார்!
(முதலாவது ஆண்டு நிறைவையொட்டி சில தினங்கள் மட்டும்)
சகலளவு போட்டோக்களுக்கும் விசேட கட்டணம்
ஸ்ருடியோ டில்கா
202, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். போன்: 8174
யாழ்ப்பாண பஸ் நிலையம் முன்பாகவுள்ளது.

# பனம்பொருள் உற்பத்தியை

## அதிகரிக்க மாதர் சங்கங்கள்

### பனம் பொருள் அ. பி. சபை அமைக்கும்

### சபைத்தலைவர் மோகனதாஸ் தகவல்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பனம்பொருள் அபிவிருத்திச்சபை பனை உற்பத்தியை அதிகரிப்பதற்குக் கடந்த ஆண்டு மூன்றே கால் லட்சம் பனம் விதைகளை நாட்டியுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களிலேயே இப் பனம்விதைகள் நாட்டப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் மட்டக்களப்பு, புத்தளம், அம்பாந்தோட்டைப் பகுதிகளில் 5 லட்சம் பனம் விதைகள் நாட்டப்படவுள்ளன.''

பனம்பொருள் அபிவிருத்தி சபை ஆலோசகரும், பொது முகாமையாளருமான கலாநிதி எஸ். மோகனதாஸ் யாழ். பனம்பொருள் உற்பத்தி அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார். கலாநிதி மோகனதாஸ் மேலும் தெரிவித்ததாவது:

#### இடைப்பயிர்

#### நாட்டலாம்

''ஒரு பனையை வளர்த்துப் பயன்பெற 20 வருடமாவது செல்லும் ஆதலால் பனவிதைகள் நாட்டப்படும் பொழுது பட்டிப்பூ, கற்றாளை, மரமுந்திரிகை, தென்னை போன்றவற்றை இடையே நாட்டினால் குறுகியகாலத்தில் நல்லபயன்களைப் பெறலாம்.

#### மாமுனையில்....

''மாமுனையில் 500 ஏக்கரில் அமைக்கப்பட்ட பெருந்தோட்டத்தில் 5 ஏக்கரில் பனம்விதையுடன் பட்டிப்பூவும், கற்றாளையும் 5 ஏக்கரில் பனம்விதைகளுடன் மரமுந்திரிகையும், 5 ஏக்சரில் தென்னையும் வைத்துள்ளோம். இவற்றுடன் வேறு பழமரங்களும் உற்பத்தி செய்து வருகின்றோம்.

#### பனம்பொருள்

#### பதனிடும் நிலையம்

''பருத்தித்துறை திக்கம் என்ற இடத்தில்பனம்பொருள் பதனிடும் நிலையம் 8 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பனைஓலை, நார் போன்றவற்றைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்யவுள்ளோம்

''பனை வளர்ச்சிக்கு நல்ல இனவிதைகளை நாட்டுவதுடன் பனைகள் வளர்வதற்குப் பசளை இடுவதுபற்றியும் ஆராய்ச்சி செய்துவருகிறோம்.

#### கொழும்பு

#### கற்பகத்தில்---

கொழும்பில் 3லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு கட்டப்பட்ட 'கற்பகம்' நிலையத்தில் 150 பனம்பொருள்கள் விற்பனை செய்யப்பப்படுகின்றன. இந் நிலையத்தைப்போல் யாழ்ப்பாணத்திலும் ஒரு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் முக்கிய நகரங்களில் 'கற்பகம்' நிலையங்கள் மேலும் நிறுவ உத்தேசித்துள்ளோம்.

#### மாதர்சங்கங்கள்

#### அமைத்து---

''பனம்பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கரவெட்டி, சாவகச்சேரி, மன்னார், பூநகரி, நெடுந்தீவு, எருக்கலம்பிட்டி ஆகிய இடங்களில் மாதர் சங்கங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

#### பனஞ்சாராய

#### வடிசாலைகள்

ஊறனியிலுள்ள பனம் சாராய வடிசாலையிலிருந்து 6,300 கலன் சாராயமும் கைதடியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட வடிசாலையில் 7,000 கலன் சாராயமும் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஊர்காவற்றுறை வடிசாலையிலும் உற்பத்திபெருகியுள்ளது.

இத்தனை தொழிற்சாலைகள் இருந்தும் பனம் கள்ளு உற்பத்தி அதிகரித்த காலத்தில் பல்லாயிரக்கணக்கான கள் வீணே ஊற்றப்படுகின்றது. ஊற்றப்படும். இக்கள்ளைப் பயன்படுத்துவதற்குப் படிப்படியாக மேலும்தொழிற்சாலைகள் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம்.

பனம் பொருள் அபிவிருத்தி சபையின் முக்கிய நோக்கங்கள் சந்தைப்படுத்துதல், உற்பத்தி, ஆராய்ச்சி ஆகும். இவற்றின் மூலம் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பு வசதிகளும் கிடைக்கும். [மா]

---

### இடை நிறுத்தம் செய்யப்பட்ட

## தொழிலாளருக்கு மீண்டும் வேலை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மராமத்துப்பகுதியில் இடை நிறுத்தம் செய்யப்பட்ட தெரு வேலைத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவது பற்றி நவலங்கா தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மாநகர சபை நிர்வாகத்தினருக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையின் போது, இடை நிறுத்தம் செய்யப்பட்ட 66 தெரு வேலைத் தொழிலாளர்களுக்கும் அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன்னர் மீண்டும் வேலை வழங்குவதாக நிர்வாகம் தெரிவித்தது.

மராமத்துப்பகுதித் தொழிலாளர்கள் சார்பாக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட ஏழு கோரிக்கைகள் சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டது.

பேச்சுவார்த்தை, மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நவலங்கா தொழிற்சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி சோ. தேவராசா, செயலாளர் வை. வன்னியசிங்கம். கா. பஞ்சரத்தினம், சி. செல்லையா, வீ. புஸ்பரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். நிர்வாகத்தின் சார்பில் முதல்வர், ஆணையாளர், துணை முதல்வர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## பள்ளிவாசல் நிர்வாகிகள்

[மண்டைதீவு]

மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசல் வருடாந்த பொதுக் கூட்டம் மேற்படி தேவாலய கட்டிடத்தில் திரு. மீருன் முகதீன் ஆலிம் தலைமையில் நடைபெற்ற போது கடந்த வருட நிர்வாக சபை உறுப்பினரேயே மீண்டும் நியமிக்கவேண்டும். என்று சங்கத்தினரால் முடிவு செய்யப்பட்டது.

---

### கடற்றொழிலாளர் கூட்டம்

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டைதீவு கிளைப் பொதுக்கூட்டம் இம் மாதம் 21ம் திகதி கிளைத்தலைவர் திரு. செ. செபஸ்தியன்பிள்ளை தலைமையில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறும். சங்க பொது முகாமையர் திரு. சி. திருநாவுக்கரசு கடற்றொழில் பரிசோதகர் திரு. எஸ். விக்கினேஷ்வரன் கடற்றொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எம். பிலிப் ஆகியோர்கள் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.

---

## ''தமிழ்ப்பகுதி அபிவிருத்தி அரசியல் கலப்பற்ற ஒரு அமைப்பு உருவாக வேண்டும்''

(யாழ்ப்பாணம்).

''தமிழ் மக்கள் பணத்தை வெறுமனே முடக்கி வைக்காது தமிழ்ப்பகுகளின் திட்டமிட்டபொருளாதார அபிவிருத்திக்குப்பயன்படுத்தல் வேண்டும். இதற்கான ஒரு அமைப்பு அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் உருவாக வேண்டும். இல்லையேல் நாட்டில் ஒரு பொருளாதாரநெருக்கடி ஏற்படுமானால் தமிழ்ப்பகுதிகள் மிகுந்த துன்பத்தை அநுபவிக்க வேண்டிநேரிடும்''.

இவ்வாறு அருட்திரு ஜேம்ஸ் பத்திநாத அடிகள் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் ''சமூக சேவைகள்'' தினத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ''நாம் எம்மிடம் பிச்சைக்கு வருபவர்களுக்கு வெறுமனே சில சில்லறைகளைப் போட்டு விட்டோ அல்லது ஒரு நேர உணவை வழங்கி விட்டோ திருப்திப்படுவோமானால் நம்மை நாமே ஏமாற்றியவர்கள் ஆவோம். நம்மைப்போன்ற ஒரு மனிதன் ஏன் இவ்வாறு வறுமைநிலை அடையவேண்டும் எனச் சிந்தித்து இனிமேலும் ஒருவன் இந்நிலைக்கு ஆளாகாமல் செயற்படும் பொறுப்பு நமக்குண்டு'' என்றார்.

இக்கூட்டத்தில் திரு. ஏ. எஸ். அகஸ்ரினும் கல்லூரி அதிபர் மைக்கல்யோசவ் அடிகளும் மாணவர்களும் உரையாற்றினர். (கி)

---

## ''பெற்றசுதந்திரத்தைப் பேணிப்பாதுகாப்போம்''

-- கல்லூரி அதிபர்

(அரியாலை)

''அரசியல் சுதந்திரத்தின் மூலம் நாடு விடுதலை பெற்றது. வளர்ந்துவரும் பொருளாதாரச் சுதந்திரத்தின்மூலம் நாட்டின் பொருளாதாரச் செல்வம் வளர்ந்துவருகிறது. உத்தியோகத்திற்காக ஆங்கிலேயரால் அறிமுகம் செய்யப்பட்ட ஆங்கிலக் கல்வியின் அந்தஸ்து, நாடு பூரண சுதந்திரம் பெற்றதினால் சுதேசிய மொழிகளான சிங்களத்திற்கும், தமிழுக்கும் கிடைத்தது. இதனால் தேசியப் பற்றும், ஒருமைப்பாடும் ஏற்பட்டுள்ளது.''

இவ்வாறு நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயமண்டபத்தில் நடைபெற்ற சுதந்திரதின விழா வைபவத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து கல்லூரி அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் தம் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவந்தாலும் நாட்டின் தேசிய செல்வத்திற்கும், விவசாயத்திற்கும், கைத்தொழில்களுக்கும் இவர்களின் ஆட்சியின்போதே அழிவுகள் ஏற்பட்டது. இதனாலேதான் நாம் பிறநாட்டவரை எதிர்பார்த்து வாழும் நிலைமை ஏற்பட்டது. 1948ம் ஆண்டில் நாடு சுதந்திரம்பெற்ற பின்னர் நாட்டில் விவசாயமும், கைத்தொழில்களும் பெருமளவில் அபிவிருத்தியடைந்து வருகிறது. எமது நாட்டின் பொருளாதாரம் பிறநாட்டவரின் உதவியிலேயே தங்கியிருக்கிறது. இந்த அவல நிலைமாற இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களும் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க, வளர்ந்துவரும் பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க நாம் எல்லோரும் ஒன்றுபட்டுழைக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

---

## இளம்பெண்ணை பலாத்காரம் செய்யமுயன்றாராம்

(சாவகச்சேரி)

''சம்பவதினத்தன்று காலை 6.30 வரையில் நான் எனது வீட்டிலிருந்து சுமார் 100யார் தூரமுள்ள இடத்திற்குக் காலைக்கடன் கழிக்கச் சென்ற போழுது எதிரி எனக்குப்பின்புறமாக வந்து என்னைக்கட்டிப்பிடித்துத் தூக்கித் தொந்தரவு செய்ய முயன்றார். நான் இடறியதும் எதிரி 'தொம்' என என்னைப் போட்டார்''

81ம் ஆண்டு ஆடி மாதம் 9ம் திகதி கறுக்காய் வரணியைச்சேர்ந்த இளையதம்பி செல்வரத்தினம் என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த கீனு மேரி ஜெனோபா (வயது 18) என்பவரை பலாத்காரம் செய்யமுயன்றதாக குற்றம் சாட்டிச் சாவகச்சேரி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளம்பட்ட பொழுது சாட்சியமளிக்கையில் இளம் பெண் மேரிஜெனோபா கூறினார் அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''எதிரி எந்தப்பக்கத்தால் வந்தார் என்பது எனக்குத் தெரியாது அவர் என்னை பலவந்தமாக விழுத்தினார். நான் சம்மா அம்மா என்று குளறினேன். அப்பொழுது தனது ரத்தை எனது வாய்க்குள் திணித்தபர், நான் உதறி விழுத்திவிட்டு ஓடினேன். ஓடும்பொழுது பின்சட்டையைப்பிடித்திருந்தார். நான் முற்பற்றைகளுக்கூடாக ஓடினேன். அப்போது நான் போகும் பாதையில் ஆட்கள் பலர் நின்றார்கள். அவர்கள் என்னைக் கவனிக்கவில்லை. நான் பயத்தினால் அவர்களைப் பாராது ஓடினேன். ஓடிச் சென்று எனது அம்மாவுக்கு நடந்ததை கூறினேன் பின்பு அம்மாவைக் கூட்டிக்கொண்டு எதிரியின் தாய் தந்தையரிடம் போய் நடந்ததைக் கூறினோம் அதற்கு அவர்கள் 'அவனென்று நீ சரியாகக் கண்டியா' என்று என்னைக்கேட்டார்கள் பின்னர் நாங்கள் பொலிசுக்குச் சென்று வாக்கு மூலமளித்தோம்'' என்றார். நீதிபதி வழக்கை ஏப்ரல் 5ம் திகதிவரை ஒத்திவைத்தார். (அ)

---

### முதலையைப் பொலிசார் சுட்டுக்கொன்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் மீனவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த முதலை மாநகரசபை அலுவலகத்துக்கு முன்பாக உள்ள வாவிக்கரை ஓரத்தில் மட்டக்களப்பு பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டது,

பதினைந்து அடி நீளமும், நாலரை அடி அகலமும் கொண்ட இந்த முதலை பல ஆடு மாடுகளையும் பலியெடுத்ததால் மீனவர்கள் கரையோரத்தில் வலைவீச முடியாத நிலையிலும் இருப்பதாகவும், மாலை நேரத்தில் வாவிக்கரையோரத்தில் இம்முதலை காணப்படுவதாகவும் மட்டக்களப்பு மீனவர்கள் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து பிரதி பொலிஸ் மா அதிபரின் உத்தரவின்மீது மட்டக்களப்பு பொலிசார் இந்த முதலையை சுட்டுக் கொன்றனர். இம்முதலை மீது ஒன்பது தடவைகள் சுடப்பட்டது,

---

● அன்ரனு பொருத்துதல் ● றேடியோ ● மணிக்கூடு ● ரி. வி. பழுதுபார்த்தல்
● பாடல்களை பதிவு செய்தல் அனைத்துக்கும்

வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்

266/1, ஸ்ரான்லிவீதி, ஸ்ரீதர் தியேட்டர் முன் யாழ்ப்பாணம்.

# “பாரதியின் சமகால தேசபக்தர்களில் பாரதி தனித்துவமுடையவர்”

(யாழ்ப்பாணம்)

''மறுமலர்ச்சி என்ற கோட்பாடு ஐரோப்பாவில் அர்த்தப்படுத்தப்படுவதைப் போல் அப்படியே இந்தியாவிலும் அர்த்தப்படுத்திவிட முடியாது. ஐரோப்பிய நிலைமைகளுக்கும் இந்திய நிலைமைகளுக்கும் அதிக வித்தியாசங்கள் காணபபட்டன. பாரதியார் தனது காலத்தில் மறுமலர்ச்சி என்ற சொல்லை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கையாண்டதைக் காண முடியவில்லை. ஆனால் கிட்டத்தட்ட அதற்குச் சமமான சொற்பிரயோகங்களைப் பாரதியார் நிறையக் கையாண்டிருக்கின்றார். புனர்ஜென்மம், புத்துயிர், புதுவாழ்வு போன்றவை பாரதியாரால் அடிக்கடி கையாளப்பட்ட சொற்பிரயோகங்களாகும். 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற பாரதியார் கையாண்ட சொற்றொடர் வெறும் ஓசை நயத்துக்கானவை அல்ல. அது ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கோட்பாட்டுடன் இசைந்து செல்லக் கூடியதொன்றேயாகும்''

மேற்கண்டவாறு தேசிய கலை இலக்கியப் பேரவை யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடத்திய பாரதி நூற்றாண்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் க. கைலாசபதி கூறினார்.

திரு. அ. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் கைலாசபதி தொடர்ந்து பேசுகையில் ''பாரதி புதுமையை விரும்பினான். அதற்காகப் பழமையின் பெயரால் செய்யப்பட்டுவந்த சமூக அநீதிகள் சகலதையும் கண்டித்தான்; எதிர்த்தான். பாரதியாருடைய சமகாலத்தில் வாழ்ந்த தேசபக்தர்கள் சகலரையும் விட பாரதி சொல்லிலும் செயலிலும் மிக முன்னேறிய ஒருவராகவே இருந்தார். இந்த வகையில் பாரதிக்குத் தனி இடமாகவே இருக்கிறது எனலாம்.'' (அ)

# போட்டிப் பரீட்சை 13-ல் நடைபெறும்

(கரவெட்டி)

மாவட்ட ஆசிரியர் சேவையின் கீழ் சிங்கள, தமிழ் மொழி மூலப்பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தேறியவர்களிடம் இருந்து ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை இம் மாதம் 13ம் திகதி நடைபெறவுள்ளது.

இப் போட்டிப் பரீட்சைக்கான பிரவேச சீட்டுக்கள் தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டன.

பிரஸ்தாப போட்டிப் பரீட்சையில் ஆங்கில உதவி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களைத் தவிர்ந்த ஏனைய விண்ணப்பதாரிகள் உளச்சார்பு, பொது அறிவு ஆகிய இரு பாடங்களில் மாத்திரம் பரீட்சை எழுதவேண்டும்.

ஆங்கில உதவி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் உளச்சார்பு, ஆங்கிலம் ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் பதில் அளிக்கவேண்டும்.

இப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு. தபால் மா அதிபரினால் வழங்கப்பட்ட

(7ம் பக்கம் பார்க்க)

# “யாழ். மத்தியகல்லூரி வளர்ச்சிக்கு உழைத்த பெருமகன்”

(அரியாலை)

''யாழ்ப்பாண மத்திய கல்லூரி இலங்கையிலுள்ள தலை சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்க உழைத்த பெருமக்களில் ஒருவராக விளங்கிய அமரர் சாள்ஸ் இக்கல்லூரியில் பயின்று, இக்கல்லூரியிலேயே ஆசிரியராகவும் உப அதிபராகவும் பின்னர் அதிபராகவும் பணியாற்றி, சிறந்த தலைமுறைகளை உருவாக்கினார்'' என்று காலஞ்சென்ற யாழ். மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் சாள்ஸ் மாஸ்டரின் இறுதி அஞ்சலியின்போது யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. இரத்தினசிங்கம் இரங்கலுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கச்சேரிநல்லூர் வீதியிலுள்ள அமரரின் புதல்வரான வைத்திய கலாநிதி ஜெயராசாவின் இல்லத்தில் நடைபெற்ற இறுதி அஞ்சலியின்போது அதிபர் தொடர்ந்து பேசுகையில், ''கல்லூரியின் வளர்ச்சியோடு தம்மை இணைத்துக் கொண்ட அமரர் சாள்ஸ் தமது இறுதிக்காலத்தில் கல்லூரியின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டிருந்ததுடன் இறைவன் வழங்கிய சிறந்த வாழ்க்கையின் பெருபகுதியைக் கல்லூரியின் வளர்ச்சியிலேயே செலவிட்ட இவரிடம் கல்விகற்ற பெரும் தொகையான மாணவர்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் விசேஷமாக வெளிநாடுகளிலும் மிகவும் உயர்ந்த பதவிகளை வகித்து வருகிறார்கள். கல்லூரியின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியது'' என்று குறிப்பிட்டார்.

பழைய மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் உட்படப் பெருந்தொகையானோர் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டதுடன் கல்லூரிக் கொடிபோர்த்தி மரியாதை அளிக்கப்பட்டது. இறுதி ஆராதனையை யாழ்ப்பாண ஆர்ச்டீக்கான் அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளாரின் தலைமையில், அருட்திரு ஜே. சர்வானந்தன் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். (அ)

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 1978-ம், 1979-ம், 1980-ம் ஆண்டுகளுக்கான வருமான செலவுக் கணக்குக் கூற்று.

## வருமானம்

| நிகழ்ச்சித் திட்டம் | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| 1. பொது நிர்வாகம் | 2,88,533.65 | 3,54,563.18 | 3,53,934.38 |
| 2. சௌக்கிய சேவை | 9,545.60 | 10,933.55 | 19,268.95 |
| 3. பௌதிகத்திட்டமிடல், பொதுவழிகள் கட்டிடங்கள் | 10,252.44 | 8,945.16 | 9,269,86 |
| 4. தண்ணீர் சேவை | — | — | — |
| 5. ஏனைய பொதுப்பயன்பாட்டுச் சேவைகள் | 38,956.38 | 39,217.06 | 48,007.23 |
| 6. நலன்புரிச் சேவைகளும் வசதிகளும் | 30,967.20 | 25,609.80 | 28,487.15 |
| 7. மின்சாரம் | 2,40,389.14 | 2,71,756.23 | 3,10,249.88 |
| | 6,18,644.41 | 7,11,044.98 | 7,69,217.45 |

## செலவினம்

| நிகழ்ச்சித்திட்டம் | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| 1. பொதுநிர்வாகம் | 25018.88 | 112211.88 | 1,23,634.40 |
| 2. சௌக்கிய சேவைகள் | 190953.71 | 257916.85 | 2,49,899.18 |
| 3. பௌதிகத்திட்டமிடல்பொதுவழிகள் கட்டிடங்கள் | 34909.93 | 26870.35 | 64,260.85 |
| 4. தண்ணீர் சேவை | — | — | — |
| 5. ஏனைய பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் | 22229.10 | 31921.82 | 43,521·80 |
| 6. நலன்புரிச்சேவைகளும் வசதிகளும் | — | — | — |
| 7. மின்சாரம் | 345113.95 | 297946.72 | 4,06,664.06 |
| | 718225.57 | 726867.62 | 8,87,980.29 |

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 1978, 1979-ம், 1980-ம் ஆண்டுகளுக்கான ஐந்தொகைக் கூற்று

| | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 80001.50 | 85706.50 | 66232.00 |
| **நட்புச்சொத்துக்கள்** | | | |
| களஞ்சியப்பொருட்கள் | 24618.19 | 11183.02 | 45740.82 |
| பயன்பாட்டுச் சேவைகளுக்கான கடன்கள் | 26834.16 | 26834.16 | 26834.16 |
| பதவியினர் கடன்கள் | 38653.83 | 72353.83 | 89664.94 |
| அரசிறைக் கடனாளிகள் | 219124.35 | 316396.09 | 322934.84 |
| முதலீடுகள் | 44350.00 | 18350.00 | 18350.00 |
| காசு | 13883.42 | 54038.22 | 120968.89 |
| | 447475.45 | 584861.82 | 690725.65 |
| வழி—நடப்புப் பொறுப்புகள்: | | | |
| கடன் வழங்குநர் | 218303.38 | 329199.00 | 496771.92 |
| முற்பணப்பெறுகைகள் | 70945.92 | 70945.92 | 5516.94 |
| மீளளிக்கப்படற்பாலதான வைப்புப்பணங்கள் | 115560.46 | 163211.82 | 324806.82 |
| | 404809.76 | 563356.74 | 827095.68 |
| தேறிய சொத்துக்கள் | 42665.69 | 21505.08 | 136370.03 |
| நிதியளிக்கப்பட்ட வழி— | | | |
| திரண்ட நிதியும் ஒதுக்குகளும் | 31760.14 | 16603.03 | 140165.46 |
| கடன் மூலதனம் | 10905.55 | 4902.05 | 3795.43 |
| | 42665.69 | 21505.08 | 136370.03 |

ச. ஞானமூர்த்தி
தலைவர்
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 3—2—82

2214

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
வெலிலி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
நூல்வேலி



கடைசி வாரம்
ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்


# பிரயாணிகள் பாதிப்பு!

(மண்டைதீவு)

யாழ்ப்பாணத்திலிருந்து சாட்டி ஊடாக அம்மன் கோவில் வீதிவழியாக வேலணைக்கு செல்லும் பஸ்சேவை இரவு நேரத்தில் நிறுத்தப்பட்டதால் இப்பிரயாணிகள் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

இவ் வீதியில் தனியார் வாகனங்களும் சேவையில் ஈடுபடுவதில்லையாம்!


ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)



ஸ்ரீதர் தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி — ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதியபிரதி)



Regal Cinema
(Jaffna) Tele. 360.
தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
SCORPIO
12 - 2 - 82 முதல்
தனிமரம்



8-2-82 வரை மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்



வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை



சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
12—2—82
'குரு' கடைசி தினமும் 150வது நிறைவு தினமும்
13th "THREE THE HARD WAY"



Rajah
JAFFNA
LOVE BUG'S RETURNS
Daily 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
WALT DISNEY
Present
HERBIE GOES
TO MONTECARLO
(Color by Technic
For School Children Contact Management



WINDSOR
(JAFFNA)
Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 – The Concorde'
Starring : Alain Delon, George Kennedy
Susan Blakely.

இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றார்கள். திடீர்த் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றார்கள் என்பதை வெண்திரையில் காண்க.


# இன்றைய பலன்

தை மாதம் 26 ம் திகதி
திங்கட்கிழமை
(8—2—82)

மேடம்: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கு இலக்காகுவீர்கள், சிலருக்கு வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

இடபம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், உறவினர் ஒருவருக்கு உதவி செய்யவேண்டிய அவசியம் ஏற்படலாம், உடல் நலத்திலும் முன்னேற்றம் காணப்படுகிறது, நல்ல தினம்.

மிதுனம்: பணத்தை அள்ளி வீசினாலும் பலன் மட்டாகத்தான் இருக்கும், சக தொழிலாளர்களுடனும் மோதல்களை தவிர்த்துக்கொள்ளவும், புனைந்துரைகளால் மனம் புண்படலாம், பொறுமையே வேண்டும்.

கடகம்: பக்கத்தில் படுகுழி பாத்திருப்பர் பகைவர், விழிப்புடன் இருப்பின் வெற்றி உளதே.

சிங்கம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும், வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம், பணவரவுக்கும் இடமுண்டு, உடல் நலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உண்டு.

கன்னி: குறைகேட்க நேரிடும், கடமையில் தடைகள் தோன்றும், நஷ்டத்துக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று, உடல் நலிவு தோன்றும், கறுப்பாட்களை நம்பவேண்டாம்.

துலாம்: வேண்டிய அளவுக்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும், புதிய நண்பர்களை தேடிக் கொள்ளுவீர்கள், நீண்டநாள் கனவு இன்று நனவாகும், சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: புதிய பாதை வழி திறக்கும், புத்திர சுகமும் உண்டு, இதயத்தில் இன்பம் பொங்கும், இல்லத்தில் இனிமை தங்கும்.

தனு: தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும், நண்பர்களே காலைவாரிவிடக்கூடும், சிலருக்கு அன்னியவாசம் ஏற்படலாம்.

மகரம்: பொன்னான வாழ்வு பெண்ணாலே கிட்டும், கண்ணியம் கடைவிரிக்கும், கடமையும் சிறக்கும்.

கும்பம்: சூழ்ச்சிவலை பின்னும், அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர், கடன்பட நேரிடலாம், மன அடக்கம் நன்று.

மீனம்: தெய்வ பக்தி மேலிடும், புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள், பொதுமக்களின் மதிப்பு கிட்டும், சுமுகமான நாள்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# சிரமதானம்

(சோண்டாவில்)

இணுவில் கரைக்காடு மயானம் சிரமதான முறையில் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

காரைக்காடு மயான அபிவிருத்திச்சபையினர் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக, மஞ்சத்தடி கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினர்கள், மானிப்பாய் இந்துக்கல்லூரி சாரணர்கள் ஆகியோர் இணைந்து துப்பரவு செய்தனர்.

சிரமதான நிகழ்ச்சியை யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. சி. நாகராசா ஆரம்பித்து வைத்தார்.

தலைவர் தமதுரையில் "மானிடர்கள் எப்பொழுதும் தூய்மையானவர்களாகக் காணப்பட வேண்டும். ஒரு மனிதனின் இறுதிக்கிரிகைகள் நடக்கும் இடம் புனிதமான இடமாகும். ஆகையினால் இவற்றை நாமே துப்பரவு செய்து பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும்', என்றும் குறிப்பிட்டார்.

கல்வித்திணைக்கள கடன்வழங்குசபை:

# இ.த.ஆ.சங்க யாழ்.மாவட்டக் கிளை வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களக் கடன்வளங்குசபைத் தேர்தலில் ஆசிரியர் சேவைக்குரிய 17 ஆசனங்களுக்கும் 13 கல்வி வட்டாரங்களிலிருந்து இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் 13 பேர் போட்டியிடுகின்றனர். தலைவர், செயலாளர், பொருளாளர், பிரச்சாரச் செயலாளர் ஆகியோரும் இதில் அடங்குவர். இவர்களில் இருவர் பெண்களாவர்.

இம்மாத இறுதியிய் கடன் சபைக்கான வேட்பு மனுக்கள் கல்வித்திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட விருப்பதால் வேட்பாளர் விபரம் யாழ். மாவட்டக்கிளையினரால் அறிவிக்கப்பட்டது.

13 வட்டாரக் கிளைகளும் தலா ஒருவரையே சிபார்சு செய்திருந்தன. இதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் விபரம் வருமாறு:

திரு. த. காசிநாதன்: தலைவர் மட்டுவில் கமலாசினி வித்தியாலயம். திரு. சி. சிவபாலசிங்கம் செயலாளர் பெரியபுலம் மகா வித்தியாலசம். திரு. ஆ. பொ. குலசிங்கம் பொருளாளர் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம். திரு. ந. சிவபாதம் பிரச்சார செயலாளர் ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை. திரு. ம. கந்தப்பு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம். திரு. க. பரமலிங்கம் சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம் திரு. பி. ஆர். நடசாசா, இணுவில் அ. மி. த. க. பாடசாலை. திரு. செ. செல்வராசா, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம். திரு. வ. கணபதிப்பிள்ளை வல்வை சிவகுரு வித்தியாலயம். திரு. ச. நடேசபிள்ளை கைதடி நுணுவில் தமிழ் கலவன் பாடசாலை. திரு. பொ. நடராசா வேலணை ஐயனார் வித்தியாலயம். திரு. க. சிவலிங்கம் புனித திரேசா மகளிர் வித்தியாலயம் கிளிநொச்சி. திரு. க. குலசேகரம் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி திரு. வி. ஆர். ஏரம்பு புங்குடுதீவு கணேச வித்தியாலயம், திரு. த. பாலசுப்பிரமணியம் வசாவிளான் மெ. மி. க. பாடசாலை. திருமதி. க. ம. மரியெம்பிள்ளை சென் ஜோன்ஸ் மகளிர் வித்துயாலயம். திருமதி. ஆர். மயில்வாகனம் பரந்தன் இந்து தமிழ் வித்தியாலயம். [உ]

# "வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பாடுபட வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

"நாட்டின் சுதந்திரதினம் நினைவுகூரப்படும் இந்நாளில் எமது பகுதியை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாம் பாடுபடவேண்டும். அரசாங்கம் எடுக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இப்பகுதி மக்கள் ஆதரவளித்து தங்களது பங்களிப்பைச் செலுத்தவேண்டியது அவசியமானதாகும். பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்காதுவிட்டால் நாம் பெற்ற சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க முடியாது."

இவ்வாறு வலி. தென்மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவா சண்டிலிப்பாயிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற சுதந்திரதின விழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சுதந்திர தினத்தையொட்டிய விசேட பூசையைத் தொடர்ந்து தேசியக்கொடியை அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் திரு. வி. சண்முகம் ஏற்றிவைத்தார். இதனையடுத்து நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து திரு. ஏ. மகாதேவா உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:—

"எமது கலை, கலாசாரத்தைப் பேணவும், அவற்றை எமது எதிர்காலச் சந்ததியினர் தொடர்ந்து பின்பற்றச் செய்யவும் இந்த சுதந்திர தின நன்னாளில் நாம் திடசங்கற்பம் செய்யவேண்டியது அவசியமாகும். சமூகவளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் தொடர்ந்து அபிவிருத்தியடைந்து எமது நாடு முன்னேற்றப்பாதையில் செல்ல இந்த சுதந்திரதினத்தில் இறைவனை வேண்டுவோம்."

# தேநீர் வைக்கச்சென்ற இளம் பெண் தீக்குப்பலி!

(புலோலி)

அதிகாலை வேளையில் மண்ணெண்ணை ஊற்றி அடுப்புப் பற்றவைத்த இளம்பெண் ஒருவரின் ஆடையில் பற்றிய நெருப்பு உடலிலும் பிடித்ததினால் அவ்விளம்பெண் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

கம்பர்மலை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கௌரிதேவி (வயது 26] என்பவரே நெருப்புப் பற்றியதனால் பரிதாபகரமாக மரணமடைந்தவராவார். இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. சு. வைரமுத்து மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிஸ்கான்ஸ்டபிள் சி. டேவிட் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

இறந்தவரின் தாயார் குலசேகரம்பிள்ளை கண்மணி சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:

"இறந்தவர் மரணமடைவதற்கு 5 நாட்களுக்கு முன்னர் அதிகாலை 5 மணிக்கு நித்திரையால் எழும்பி. குசினிக்குள் தேநீர் வைக்கச் சென்றார். சற்று நேரத்தின் பின் சத்தம் கேட்கவே, அங்கு சென்றபோது அவரின் உடுப்பில் நெருப்புப் பற்றி எரிந்தது. உடம்பிலும் நெருப்புப் பிடித்தது. உடனடியாகக் காயங்களுடன் இவரை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம். ஐந்தாவது நாள் அவர் இறந்தார்."

இறந்தவரின் தகப்பனார் குலசேகரம்பிள்ளை, சகோதரி சரோஜினிதேவி ஆகியோரும் சாட்சியமளித்ததைத் தொடந்ந்து தீவிபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (இ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் பிரபல நகைக்கடைகளின் மத்தியில் 2 பரப்புடனும், 2 கடைகளுடனும் காணி விற்பனைக்குண்டு. தயவுசெய்து நேரடித் தொடர்பு கொள்ளவும். ஞானசுந்தரம், 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2220

தும்பளை நெல்லண்டை வீதியில் சகல வசதிகளுடனுன வீடு மூன்று பரப்புக்காணியுடன் விற்பனைக்குண்டு பா சுப்பிரமணியம், சட்டத்தரணி தும்பளை, பருத்தித்துறை. 2200

இரண்டு சக்கர (Mitsu Bishi Shakti) மிற்சுபிசி சக்தி 10 HP உழவு யந்திரம் பெட்டி, றெட்டவேற்டருடன் விற்பனைக்கு உண்டு. டாக்டர் தி. கங்காதரன், Van west Clinic, வண்ணார்பண்ணை. தொலைபேசி: 7887. (2218)

## சேவை

அகத்தி, சஞ்சீவி, சவுக்கு, இப்பில் இப்பில் ஆகிய கன்றுகளை யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றார்கள். தேவையானோர் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். (2222)

## தேவை

பழுதடைந்த (திருத்தி பாவிக்கக்கூடியவை மட்டும்) மெசிபர்குஷன், பேர்ட், இன்டர்நஷனல், I. M. T., டெக்ஸ்டா உழவு இயந்திரங்கள் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். எஸ். வேலுப்பிள்ளை, 78/58, கல்கேபிட்டியா, சுதும்பொல, கண்டி. (2221)

பிரபல பிடவை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் (ஆண், பெண்) தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2223, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். [2223]

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன் (செய்முறைப் பயிற்சிகளுடன்) Hotel Management பயிற்சி ஜேர்மன், பிரஞ்சு மொழி வகுப்புக்களும் ஆரம்பம். 10-02-82 அனைவரும்சேரலாம். விபரங்களுக்கு நேரில் வரவும். நாஷனல்அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2187

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M B 1188

முத்து கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
21/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக
சித்தர் கந்தையா நல்லதம்பி,
லிபேர்ட்டி சினிமா, அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில் M B 1188—ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1982—ம் ஆண்டு மாசி மாதம் 16—ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1—45 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 29500/— பின் 28—5—79 தொடக்கம் 7—2—80வரைக்கும் ரூபா25000/—க்கு 6%வீதவட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 907 சதம் 74 இதில் முழுத்தொகையிலும் ரூபா 15500/— கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று அச்சுவேலி வடக்கிறை ''கொல்லை'' நில பர. 4 மேற்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இந்த நிந்தப்படுத்தப்பட்டுப் பிரிக்கப்பட்ட துண்டு நில பர. 4க்கு எல்லை வடக்கு கிராமச்சங்கத்துக்குரிய ஆதனமும் பஸ் நிலையமும், கிழக்கு வெள்ளையன் பொன்னனுக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை, மேற்கு, எஸ். கந்தையாவுக்குரிய ஆதனம் இதன் மிகுதியாதனம். இதன் பதிவு இலக்கம் கே. 297/119.

2. மேற்படி இறை ''கொல்லை'' நில பர. 4½யும் ஆதற்குச் சேர்ந்தயாவும் நிந்தப்படுத்தப்பட்டு பிரிக்கப்பட்ட துண்டு நில பர. 4½க்கு எல்லை வடக்கு விஞயகமூர்த்தி பெண் சிவபாக்கியத்துக்குரிய ஆதனம், கிழக்கு க. நல்லதம்பியினுதைனம், தெற்கு 10½ அடி அகலமான ஒழுங்கை, மேற்கு தெரு இதடங்கலும் இதன் பதிவு கே 322/90.

இந்த இரு துண்டு காணிகளும் தற்போது நில அளவையாளர் ஆர். ஜே. ஜெயரத்தினம் 1974—5—25ந் திகதியிடப்பட்டு 100—ம் இலக்கத்தில் தயாரித்த நில அளவைப் படத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படியிறை ''கொல்லை'' குறித்த 100—ம் இலக்க அளவைப்படத்தின்படி நில பர 6 குளி 1·38 இது 8—ம் வட்டாரம் அச்சுவேலி கிராமசபை எல்லைக்குள் ஆவரங்கால் வீதி வரி மதிப்பீட்டு எண் 51/122, 511, 512ம், இதற்கு எல்லை கிழக்கு வெள்ளையன் பொன்னன் ஆதனம், தெற்கு ஒழுங்கை, மேற்கு றோட்டு, வடக்கு விஞயகமூர்த்தி பெண் தவபாக்கியத்திஞதனமும் கிராமச்சங்கத்திஞதனமும்.

சி. சோ. நரசிங்கம் ஜே. பி.,
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்.

தொல்புரம்,
சுழிபுரம்,
8—12—81. (2209)

## வரணி கொலை வழக்கு:

# ''இரத்தம் தோய்ந்த நிலையில் கணவன் வெட்டப்பட்டுக் கிடந்தார்''

(சாவகச்சேரி)

''சம்பவ தினம் காலை 8 மணிக்கு எனது கணவரும். அவரது சகோதரன் வன்னிய குலசிங்கராசாவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வேலைக்குச் சென்றூர்கள். பின் 3 மணி வரையில் பிள்ளைகளை எனது தாயாருடன் விட்டு விட்டுத் தோட்டத்திற்குக் கிளிக் காவலுக்குச் சென்றேன். அப்பொழுது ஒரு சிறுவன் வந்து ''உங்கள் கணவர் கோவிலடியில் வெட்டப்பட்டுக் கிடக்கிறூர்'' என்றுன். நான் உடனே ஓடிச்சென்று பார்த்தபொழுது கணவர் இரத்தம் தோய்ந்த நிலையில் வெட்டப்பட்டுக் கிடந்தார்.''

### மனைவி சாட்சியம்

கடந்த வருடம் பெப்ரவரி 24ந் திகதி வரணியைச் சேர்ந்த சிதம்பரநாதர் வன்னிய குலசிங்கம் என்பவரை அவரது சகோதரர்களான சி. இரத்தினசிங்கம், சி. பாலசிங்கம் ஆகியோர் கொலைசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டி சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில், நீதிபதி எம். எச்.காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது கொலையுண்டவரின் மனைவி வள்ளிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினூர்.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி திருமதி நிமாலினி அம்பிகைபாலன் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர்; ஸ்ரீசிவாயாவும், 2ம் எதிரி சார்பில் திருமதி நிமாலினி அம்பிகைபாலன் அனுசரணையுடன் ஆஜராகினர்.

கொலையுண்டவரின் மனைவி வள்ளிப்பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''எனது கணவரை சுற்றி அப்பொழுது அவ்விடத்தில பலர் நின்றூர்கள் அவர்கள் அவரைக் காரில் ஏற்றி உடனே வைத்தியசாலைக்கு அனுப்பினூர்கள் வைத்தியசாலையில் 3ம் நாள் எனது கணவர் காலமானூர் பிரேத பரிசோதனையின்போது நான் அவரை அடையாளம் காட்டினேன்,

''எனது கணவருக்கும் அவரது சகோதரர்களான 1ம், 2ம் எதிரிகளுக்குமிடையில் பல காலமாகக் காணி சம்பந்தமான பிரச்னைகள் இருந்தவந்தது. இதுதான் இக்கொலைக்கு அடிப்படைக் காரணம் என நான் கருதுகிறேன்'' என்றூர்.

இவ்வழக்கு விசாரணை பெப்ரவரி 17ந் திகதிக்கு நீதிபதியினுல் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

## அறிவித்தல்

மரணசாதனமின்றி மரணித்த திருநெல்வேலி தெற்கு அம்பலவாணர் இரத்தினசபாபதி என்பவரின் ஆதனங்களும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

இரத்தினசபாபதி கைம்பெண் சிவஞானமணியம்மா, அம்பலவாணர்பாதை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழக்கு இல. தத்துவம் 36.7

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கு மற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982—ம் ஆண்டு பங்குனி மாதம் 19—ந் திகதி முற்பகல் 9—30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதென ஆக்கப்படாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்

த. குலஞானம்,
பதிவாளர்.

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (2216)

விற்பனைக்கு

## பேட்டிப்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அட்டை ஆகியவற்றில் ஒன்றைச் சமர்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### வழக்கு இலக்கம் நம்பிக்கைச்சொத்து 19

புத்தூர் சிவன்கோவில் தர்மகர்த்தா

சிவசம்பு சித்தம்பலம் —விண்ணப்பதாரர்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோர்ட்டின் நம்பிக்கைச் சொத்து 19 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் புத்தூர் சிவன் கோவிலுக்குச் சொந்தமான ஒரு துண்டுக்காணியை 982 ஆம் வருஷம் பங்குனி மாதம் 3 ஆம் தேதி (3—3—82)முற்பகல் 11—00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்ச்சி பகுதி கச்சாய் கோவிற்பற்று பாலாவியிறை கச்சாய்த் தோட்டமும் மிரியன்காடும்'' ஏக்கர் 152 றூட் 01—பேர்ச் 07 இதில் கிழக்கு பக்கமாக ஏக்கர் 103 றூட் 02பேர்ச் 07 செய்பயிர் வான்பயிர்களும் கிணறும். இதற்கெல்லை கிழக்கு மிரியன்குளமும் கார்த்திகேசு கணபதிக்கும் தம்பிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள், வடக்கு ஒழுங்கையும் கணபதிதம்பையாவுக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள் மேற்கு டேவிற் ஆறுமுகத்துக்கும் கந்தப்பு செட்டியாருக்குமுரியவாதனங்கள் இக்காணிக்கு வரும் ஒழுங்கை மூகப்பும் சாம்பசிவத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு கந்தப்பு செட்டியாருக்குரிய ஆதனமும் றோட்டும் இதடங்கலும்.

இவ்வாதனம் ரூ. 82900/—க்கு குறையாமல் விற்கப்படும்

குறிப்பு: ஏலம் கூறிமுடிந்ததும் அதிஉயர்கேள்விகாரரை கொள்விலை காரராகவெளிப்படுத்தியவுடன் கொள்விலை முழுத்தொகையையும் ஏலதாரரின் செலவையும் ரொக்கமாகச் செலுத்தவேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் கீழ்குறித்த ஏலதாரருடன் தொடர்பு கொள்ளவும்.

செ. விசாகரெத்தினம்
ஏலதாரர்

133, பருத்தித்துறை றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம. 5—2—82, (2208)

## குடும்பநல நிகழ்ச்சிகள்

(வவனியா)

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, நாடுமுழுவதிலும் குடும்பத்திட்ட குடிசனவியல் நிகழ்ச்சிகளை நடத்தத்திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக, இவ்வாண்டுக்குரிய ஒன்றிணைந்த செயல்திட்டத்தை வகுக்கும்படி அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இப்பணிப்புரையின் கீழ் வவனியா அரசாங்க அதிபர் சுகாதார திணைக்களம், தொழில் திணைக்களம், இலங்கை குடும்பத்திட்டச்சங்கம், பிரிவு உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் அடங்கிய உப குழுவை அமைத்து செயல் திட்டத்தை வகுத்துள்ளார்.

---

### உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(பண்டத்தரிப்பு)

வடபிராந்திய வை. எம். சி. ஏ. ஒன்றியம், வடமாகாணத்திலுள்ள வை. எம். சி. ஏ. இயக்கங்களுக்கிடையில் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, இம்மாதம் 16, 17ந் திகதிகளில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை வடபிராந்திய வை. எம். சி. ஏ. ஒன்றியத்தின் செயலாளர் திரு. எஸ். விஜயகுலசிங்கம் மேற்கொண்டுள்ளார். (க)

---

### ஐம்பது சத புதிய முத்திரை

(மட்டக்களப்பு)

இறைவரித் திணைக்களத்தின் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு தபால் திணைக்களம் புதிய 50சத முத்திரை ஒன்றை வெளியிட இருக்கிறது,

இம்மாதம் ஒன்பதாம் திகதி தபால் திணைக்களத்தின் முத்திரை வெளியீட்டுப் பணியகத்தில் தபால் மா அதிபர் இம் முத்திரை வெளியீட்டு வைபவத்தை ஆரம்பித்துவைப்பார்

பதினைந்து மாடிகளைக் கொண்ட இறைவரித் திணைக்கள தலைமையகக் கட்டிடத்தின்தோற்றத்தினைக் கொண்ட இந்த 50 சதம் பெறுமதியான முத்திரை அன்றைய தினம் சகல தபால் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என்று தபால் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

"தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம்:

# தொழிலாளர்கள் ஆதரவு வழங்க வேண்டும்"

## திரு. வனகும்புர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''தொழிலாளர் போராட்டத்தின் வெற்றிக்கு தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் ஆதரவு வழங்சப்படுவதுபோல், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தொழிலாளர்கள் ஆதரவு வழங்கவேண்டும். இந்நிலையில்தான் தமிழ்மக்கள் சுய நிர்ணய உரிமைப் பிரச்னையும் தொழிலாளர்களின் பிரச்னையும் இந்நாட்டில் தீரும்''

இவ்வாறு நேற்று தமிழ்த் தொழிற்சங்க கூட்டணி ஆதரவில் ஸ்ரான்லி வீதி பணிமனையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்ட புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்தியகுழு உறுப்பினர் திரு ஆனந்தவனகும்புர உரையாற்றுகையில் கூறினர்.

அவா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனத்தின விடுதலைக்காக குரல் கொடுப்பதேஎமது இலட்சியம். சர்வதேச சோஷலிச புரட்சி இயக்கமென்ற ரீதியில் தமிழ்ஈழ இயக்கத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு என்றும் எமது ஆதரவுண்டு. எமது போராட்டக்கொள்கைகளில் தமிழ்மக்களின் சுய நிர்ணய உரிமையுப வழங்கப்படவேண்டுமென்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

1981—ம் ஆண்டு இனக் கலவரத்தை இன்று நோக்கினுல் அரசாங்கம் அதனை மூடி மறைக்க முயலுகின்றது இருப்பினும் அது நடைபெருதகாரியமாகும்

இன்று தமிழ்ப்பேசும் மக்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றுர்கள். இதன்மூலம் இனக்கலவரத்திற்கு பின்னணி யாரென்பதை புரிந்துகொள்ள முடியும்.

இக் கலவரம், எதிர்பாராமல் ஏற்பட்ட கலவரம் அல்ல. அரசினுல் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு பயங்கரவாதத்தை ஏற்ப த்தவேண்டுமென்ற முறையில் செய்யப்பட்டது.

இந்த அரசின் காலத்தில் ''ராஜ்சியத்துக்குள் ராஜ்சியம்'' ஆட்சி நடைபெறுகின்றது. அதாவது ஜனதிபதியின் ஆட்சிக்குள் பாதுகாப்புபடையின் ஆட்சி நடைபெறுகின்றது. அந்த ஆட்சியும் சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில்தான் நடைபெறுகின்றது.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் மூலம்தான் ''ராஜ்சியத்துக்குள் ராஜ்சியம்'' ஆட்சியை எதிர்க்கமுடியும். ஜனநாயகத்தை பாதுகாப்பதாயின் தமிழ் மக்களின் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கவேண்டும்.

''தொழிலாளர் போராட்டத்துக்கு . தமிழ் ஈழமக்கள் ஆதரவு தேவை அதேபோல் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தொழிலாளர் ஆதரவு தேவை இந்த ஒற்றுமை, ஐக்கியம் எம்மிடையே வளர்க்கப்படவேண்டும். இந்த தொடர்பு மூலம் முதலாளித்துவ அரசை விரட்டி தொழிலாளர் அரசாங்கத்தை அமைத்து தமிழ் ஈழத்தையும் அமைப்போம். (உ)

---

## அரசியலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் எமக்கு சோதனைமிகுந்தகாலம். தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமைக்காககருத்துவேறுபாடுகளை மறந்து ஒன்றுபடவேண்டிய நிலைமை இரு துருவங்களாக பிரிந்து நின்ற தமிழரசு—தமிழ்காங்கிரஸ் இணைந்தன. தமிழ்காங்கிரஸ் சார்பில் பாராளுமன்றம் சென்ற என் சகாக்கள் மாறிவிட்டனர். நான் கட்சி மாருமல் தமிழ் விடுதலைக்காக தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருக்கிறேன்.

''கிளிநொச்சி தனி மாவட்டக் கோரிக்கை விடயம் நான் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்து அதற்குப் போராட்டம் நடாத்திவருவது சிலருக்கு கருத்து வேறுபாட்டை ஏற படுத்தியிருக்கலாம். மனச்சாட்சியுள்ளவர்கள் என் கோரிக்கை நியாயமானதென்பதை ஏற்றுக்கொள்வார்கள்.

''என்தொகுதியாழ்.மாவட்டத்தினுள் அடங்குவதால் சகல வழிகளிலும் பின்தங்கிய நிலையில்தான் காணப்படுகின்றது. அரசாங்கத்தினுல் பின் தங்கிய பகுதிகளுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை அனுபவிக்கும் தகுதி பெற்றிருந்தும் என் தொகுதி மக்கள சலுகைகளை அனுபவிக்க முடியாதவர்களாகவிருக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் பல சலுகைகள்அனுபவிக்கின்றன. எத்தனையோ மாணவர் பல்கலைக்கழகம்சென்று உயர்கல்வி பெறுகின்றுர்கள். ஆனல் கிளிநொச்சியிலிருந்து இதுவரை ஒருவராவது பல்கலைக்கழகம செல்லவில்லை. தனிமாவட்டமாக இருந்திருந்தால் இந்த அரசின் காலத்தில சுமார 100 மாணவர் சென்றிருப்பார்கள்.

75 பாடசாலைகளில் சுமார் 26 பாடசாலைகளில் ஒரே ஒரு ஆசிரியர்மட்டும்தான். 15 பேர் இடமாற்றம் பெற்று வந்தார்கள். ஆனல் 65 பேர் பயிற்சிக்குச் சென்றுவிட்டார்கள்.

கல்விஅமைச்சு விரைவில்நியமனம் செய்யவுள்ள ஆசிரியர்கள் 65 பேர் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு நியமனம்பெறுகின்றுர்கள் கிளிநொச்சி தனி மாவட்டம் என்றுல் அந்த சலுகை கிடைத்திருக்கும் நாம் சென்று குடியேறியவர்கள்தான், குடியேறியவர்கள் விமோசனம் பெற ஒரேஒரு வழி தனிமாவட்டம்தான் இதனை நான் என்றும் தொடர்ந்து வற்புறுத்துவேன்,

பரந்தன் இரசாயனத் தொழிற்சலை ஊழியர்கள் நடாத்துகின்ற போராட்டம் நியாயமானது உண்மையும் விசுவாசமும்கொண்ட தொழிலாளர்கள்தான் இப்போராட்டம் நடாத்துகின்றுர்கள். ஆனல் இந்த அரசாங்கம் தொழிலாளர்களைப்பற்றி சிந்திக்காமல் முதலாளிகளைப பற்றிதான் சிந்திக்கின்றது. அண்மையில் துல்கிரியாவில் உள்ள தொழிற்சாலையின் தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு தொழிற்சாலை தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இ. போ. ச. சேவை திறம்பட நடந்த அரச சேவை. இன்று தனியார் பஸ் சேவையை நடாத்தி இதனை மூடிவிடப்பாக்கின்றது.

''வெள்ளைஅறிக்கை மூலம் உயாகுடும்பப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகள் தனியாரிம் ஒப்படைக்கப்பட உள்ளது.

''சடந்த அரசாங்கத்தின் காலத்தில சோஷலிஷம் ஓரளவு காணப்பட்டது. இந்த அரசாங்கத்தில் முற்றுகஇல்லை. சோஷலிஷவாதிகளின் உரிமைகளை பறித்துள்ளது.

''தமிழ் தொழிற்சங்கவாதிகளுக்கு தமிழ் ஊழியர்களே விரோதிகள். தொழிலாளர் போராட்டத்தைப் பொறுத்தவரை இன,மத,மொழி வேறுபாடின்றி செயல்படவேண்டும். என்று இந்நாட்டில் தொழிலாளர் புரட்சிமூலம் ஆட்சிகைப்பற்றப்படுகின்றதோ அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள நாம் தயார். [உ]

---

விமான விபத்து:

## 23 பேர் பலி!

புதுடில்லி, பெப். 7

பாரத விமானப் படையின் விமானமொன்று, பட்டாவ் கோட்டில்,வடக்குப் பிரதேசத்தில் நேற்று காலை விழுந்து நொருங்கியதால் அதில் பயணம் செய்த விமான சிப்பந்திகள் உட்பட 23 பேர்கள் கொல்லப்பட்டனர். [க]

---

யாழ் மாவட்ட

## சாரண அணித் தலைவர்கள் பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரண அணித்தலைவர்கள் பயிற்சி முகாம் கடந்த மூன்று நாட்களாக யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. சி. கந்தமூர்த்தி கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பதினெரு பாடசாலைகளில் இருந்து 60 அணித் தலைவர்களும், உதவி அணித் தலைவர்களும் இதில் பங்குபற்றினர்.

பயிற்சிக்குப் பொறுப்பான உதவி ஆணையாளர் திரு. என். நல்லையா, பயிற்சியின் முக்கியத்துவத்தையும், சாரணர் கவனிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளையும் விபரித்துக் கூறினர், (மா)

---

## சிங்கள ம. வி. அதிபர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலய அதிபர் திரு. என். ஆர். சி. குணவர்த்தன கண்டி வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இவர் இவ்வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் 6 லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வித்தியாலய புதிய அதிபரக திரு. எம். மாப்பா நியமிக்கப்பட்டுள்ளார். (மா)

---

## மருந்து தட்டுப்பாடு

(மண்டைதீவு)

யாழ். அபிவிருதிச்கபையின் நிர்வாகத்தில் இயங்கும் வேலணை, நாரந்தனை ஆகிய இடங்களிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது குறித்து யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு நடராசாவுக்த இப்பகுதி மக்கள் அறிவித்துள்ளனர்.

---

## கட்டுநாயக்கா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு, சிறிது நேரத்தில் ஓடு பாதையில் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மற்றும் விமானங்கள், ஓடு பாதையல செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டது,

---

# இப்படியும் நடக்கிறது

விஷப் பாம்பினுல் தீண்டப்பட்ட ஒருவர், அவசரம் அவசரமாக யாழ். நகரிலுள்ள விஷக்கடி வைத்தியரிடம் அழைத்துச் செல்லப்பட்டார்.

என்ன ஆச்சரியம்! அவர் கூடவே அவரைத் தீண்டிய பாம்பும் விஷக்கடி வைத்தியரிடம் 'அழைத்து'ச் செல்லப் பட்டது!

நம்பமாட்டீர்கள்; ஆனல் நடந்தது இதுதான்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளியில் விஷப்பாம்பினுல் தீண்டப்பட்ட ஒருவர்; மயக்கமுற்ற நிலையில் கொட்டடியில் உள்ள விஷக்கடி வைத்தியரிடம் கொண்டுசெல்லப்பட்டார், இதனை அறிந்த புத்திஜீவிகள் சும்மா இருக்கவில்லை. அந்தப் பாம்பை மின்னல் வேகத்தில் 'துரத்திப் பிடித்து' ஒரு பானைக்குள் சிக்க வைத்து, சில மணி நேரத்துக்குள்ளாகவே விஷக்கடி வைத்தியரிடம் 'ஆஜர்' செய்துவிட்டனர்.

விஷக்கடி வைத்தியர் சொன்னுர்: ''பாம்பினுல் தீண்டப்பட்டவர் விரைவாக, தெய்வாதீனமாகச் சுகமடைய, இந்தப் பாம்புதான் உதவிற்று. பாம்பின் இனத்தைக் கண்டு கொண்டதால் வைத்திய சிகிச்சைமுறையும் வெற்றி அடைந்துவிட்டது'' என்றுராம்.

பாம்பைக் கண்டாலே பயம். ஆனல் கடித்த பாம்பையே தந்திரமாகப் பிடிப்பதென்றுல் ........!

ஊடுருவி

---

## இப்படியும் நடந்தது! இளைஞர்கள் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

இரவிரவாக எரிந்து சாம்பலாகிய வீடொன்று அடுத்த நாள் இரவுக்கு முன் இளைஞர்கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையினுல் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

நாவலர் வீதியில் கஸ்தூரி வீதிச் சந்திக்கு அண்மையில் ஒண்டிக்குடித்தனம் நடத்தி வந்தபாலசுப்பிரமணியம்என்பவரது ஓலையால் வேயப்பட்ட வீடு நேற்று முன்தினம் மாலை தீப்பிடித்து எரிந்து வீடும், பொருட்களும் சாம்பராயின. ஏழையான வீட்டுக்காரனின் பரிதாப நிலைகண்டு இரங்கிய அவ்வட்டார இளைஞர்கள் சுமார் 25பேர் அயல்வீடுகளில் சுமார் 2ஆயிரம் ரூபா சேர்த்து தாங்களே அந்த வீட்டைப் புனரமைத்தனர்.

முற்றுகச் சாம்பராகிய அவ் விட்டை மீண்டும்கட்டி,காணியைத் துப்புரவாக்கி வேலியும் அடைத்துக் கொடுத்துள்ளனர் இளைஞர்கள்!

---

1000 சுருட்டுக்கு 85 ரூபாவாக

## சுருட்டுத் தொழிலாளரின் சம்பளத்தை கூட்டவேண்டும்

### இரு சங்கங்களும் இணைந்து கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுருட்டுத்தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் சுருட்டுக்கு 85 ரூபாவாக உயர்த்த வேண்டுமென சகல சுருட்டு உற்பத்தியாளர்களையும் கேட்டுக்கொள்வதென அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர்சங்கம்—இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கம் ஒன்றிணைந்து ஏகமனதாக தீர்மனிததிருக்கிறது.

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. சி.க.முதலியாரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதன் பேரில் 'சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்தை ஐக்கியமான முறையில் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

இம்மாதம் 10ம் தேதி தொடக்கம் சம்பள உயர்வை ஆதரித்து விளம்பரங்கள் விட்ட இடங்களில் தொழிலாளர் வேலைக்கு செல்லலாமெனவும் விளம்பரங்கள் விடாத இடங்களில் வேலைக்குச்செல்ல வேண்டாமெனவும் தீர்மானித்திருக்கிறது.

இப் பேச்சுவார்த்தைகளில் திருவாளர்கள் நாகராசா, தம்பிராசா, க. சி. கந்தையா, வ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

---

## நூலகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்தால்தான் அபிவிருத்தியடைவானே ஒளிய வேறு எந்தவகையாலும் அபிவிருத்தியடையமுடியாது'' என்று யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. நடராசா பேசுகையில் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தை அபிவிருத்திசெய்வதற்கான திட்டங்களை நாம் புத்தகரூபத்தில் அச்சிட்டு வைத்திருக்கின்றேம் என்று குறிப்பிட்ட அபிவிருத்திசபைத் தலைவர், இத்திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர எம்மிடம் பொருளில்லை என்று கவலை தெரிவித்தார்.

அரசாங்கம் இதுவரைகாலமும் எமது அபிவிருத்திக்கு எதுவித நிதியும் கொடுக்கவில்லை; கொடுக்கவும் மாட்டாது என்றும் அவர் வலியுறுத்திச் சொன்னுர்.

''30 வருடங்களாக இருந்த நூல்நிலையத்தை எரித்தது, ஹிட்லர் யூதர்களை அழிததது துடன் அவர்களின் கலைகலாசாரங்களையும் அழித்ததற்கு ஒப்பாகும்'' என்று சொன்ன திரு. நடராசா, நூல்நிலையத்தை அழித்தால் தமிழினத்தையும் அழிக்கலாம் என்று பகற்கனவு காணுகிருர்கள், அது அது ஒரு போதும் நடக்க முடியாது; நடக்கவும் விடமாட்டேம் என்று உறுதியளித்தார்.

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், உதவி முதல்வர் திரு. எ . அலோசியஸ், ஜனுப் ஷாகுல் ஹமீட், திரு. என். ரி. செல்லத்துரை ஆகியோரும் உரை நிகழ்த்தினர். [மா]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as Newspaper. The General P.O..Sri Lanka Regd. Q.D.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.